செயற்பொறியாளர் பொபது.,நீஆஅ., கோதையாறு வடிநில கோட்டம்,நாகர்கோவில் அவர்களின் செயல்முறை நடவடிக்கை.

---

பிறப்பிப்பவர் : பொறி.வா.சுகுமாறன், M.Tech,MBA,MIE,FIV.,
செயற்பொறியாளர் பொபது.,நீஆது.,

---

செ.மு.ஆணை எண் இ1/ 3549 / 2020 / நாள் 06 .03.2020

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - திரு.மு.சுந்தரவேல், இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: எஸ்.3(3) / 26867 /2018 நாள் 07.12.2018.

தமிழ்நாடு அரசு மாநில சார்நிலை பணியாளர்களுக்கான விதி 39(அ)(1)-ன்படி பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இதர கீழ்நிலை பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலமாக இளநிலை உதவியாளர் பதவிக்கு 2016-17ம் ஆண்டிற்கு தெரிவுசெய்யப்பட்டு, இவ்வலுவலகத்தில் பணியாற்றி வரும் திரு.மு.சுந்தரவேல், இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 18.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவரது தகுதிகாண் பருவம் தமிழ்நாடு அரசு சார்நிலைப் பணி விதி 23(அ)(1)-ன்படி இவர் பணியில் சேர்ந்த நாளான 18.12.2018 முற்பகல் முதல் தொடங்குவதாக விளம்பப்படுகிறது.

இவரது இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் முடித்தல் வேண்டும். இவர் தகுதிகாண் பருவத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அடிப்படைப் பயிற்சில் கலந்துக்கொண்டு தேர்ச்சி பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

6/3/20

செயற்பொறியாளர், நீஆஅ/பொபது.,
கோதையாறு வடிநில கோட்டம்,
நாகர்கோவில்.

2/3/2020

பெறுநர்:
திரு.மு.சுந்தரவேல்,
இளநிலை உதவியாளர்,
கோட்ட அலுவலகம்,
நாகர்கோவில்.